# இலங்கைப் பாராளுமன்றம்

## பதவி வெற்றிடங்கள்

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியில் நிலவும் ஹன்சாட் அறிக்கையாளர் பதவிக்கு நல்ல தேகாரோக்கியமும் சிறந்த நல்லொழுக்கமும் உடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதன் கீழ் காணப்படும் பதவிக்கான மாதிரிப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் கல்வித் தகைமை / தொழில்சார் தகைமை / அனுபவம் பற்றிய சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2023.06.30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக, **'பாராளுமன்றச் செயலாளர் நாயகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர, கோட்டே'** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தாம் விண்ணப்பிக்கின்ற பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும். (மேலும் இந்த விளம்பரம் www.parliament.lk எனும் இணையத்தளத்திலும் காணப்படுகின்றது).

**குறிப்பு:- ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரர் ஒவ்வொரு பதவிக்கும் வெவ்வேறாக விண்ணப்பிக்க வேண்டும்.**

1. **ஹன்சாட் அறிக்கையாளர் (தமிழ்)**
   **ஹன்சாட் அறிக்கையாளர் (ஆங்கிலம்)**

1.1. **சம்பள அளவுத்திட்டம்**
2016.11.07 ஆம் திகதிய 06/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் அட்டவணை I இற்கு இணங்க இந்தப் பதவிக்கு உரித்துடைய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூ. 47,340 -3x 755/13x 1,030 - 62,995 /- ஆகும். (சகல மேலதிக கொடுப்பனவுகள் அடங்கலாக இந்த சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த ஆரம்ப முழுமொத்த மாதாந்த சம்பளம் ரூ. 100,000.00 ஆகும்).

1.2. **தொழில் பற்றிய விபரம்**
முக்கியமாக பாராளுமன்றத்தினதும் மற்றும் பாராளுமன்றக் குழுக்களினதும் கூட்டக் குறிப்புகளை சுருக்கெழுத்துக்களில் எழுதி சரியாகவும் பூரணமாகவும் அறிக்கைகளைத் தயாரித்தல்.

1.3. **வயதெல்லை**
விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுத் திகதியன்று 18 வயதுக்கு குறையாதவராகவும் மற்றும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (தற்போது அரசாங்க/ மாகாண அரசாங்க / பாராளுமன்ற சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.)

1.4. **கல்வித் தகைமைகள்**
கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சையில் (பழைய பாடத் திட்டம்) ஒரே தடவையில் 04 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்,/ கல்விப் பொதுத் தராதரப் உயர்தர பரீட்சையில் (புதிய பாடத் திட்டம்) ஒரே தடவையில் 03 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல், மற்றும் கல்விப் பொது சாதாரண தராதரப் பரீட்சையில் **உரிய மொழியில்** திறமைச் சித்தியும் கணிதப் பாடத்தில் சாதாரண சித்தியும் அடங்கலாக 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**அல்லது**

கல்விப் பொதுத் தராதர சாதாரண பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் **உரிய மொழி** உட்பட 05 பாடங்களில் திறமைச் சித்தியுடனும் கணித பாடத்தில் சாதாரண சித்தியும் அடங்கலாக 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

(**உரிய மொழி** - தமிழ் ஹன்சாட் அறிக்கையாளர் பதவிக்கு தமிழ் மொழியும் / ஆங்கில ஹன்சாட் அறிக்கையாளர் பதவிக்கு ஆங்கில மொழியும் இருத்தல் வேண்டும்.

**1.5. தொழில்சார் தகைமைகள்**

அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்திலிருந்து சுருக்கெழுத்து மற்றும் தட்டெழுத்து/சொற்கள் அமைப்பு (word processing) பற்றிய ஒரு அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும். (அரசாங்க/மாகாண/அரை-அரசாங்க நிறுவனங்களில் சுருக்கெழுத்தாளர் பதவியில் 10 வருடங்களுக்கு குறையாத அனுபவமுடைய விண்ணப்பதாரர்களுக்கு இந்த சான்றிதழ் இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை).

**1.5.1. ஹன்சாட் அறிக்கையாளர் (தமிழ்)**

(அ) சுருக்கெழுத்து வேகம் - நிமிடம் ஒன்றுக்கு 110 சொற்கள் (90% செவ்வையுடன்)
தட்டெழுத்து வேகம் - நிமிடம் ஒன்றுக்கு 30 சொற்கள் (95% செவ்வையுடன்)

(ஆ) தமிழ் மொழியில் உயர் தர தேர்ச்சி

(இ) ஆங்கில, சிங்கள மொழி அறிவு, கணனிப் பிரயோக அறிவு மற்றும் பரந்த பொது அறிவு என்பன மேலதிகத் தகைமைகளாகக் கருதப்படும்.

**(ஈ) பதவியில் நிரந்தரமாக்குவது பற்றிய நிபந்தனைகள்:**

தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ் மொழி ஹன்சாட் அறிக்கையாளர்கள் நியமனம் பெற்று ஒரு வருடத்தினுள், 95% செவ்வையுடன் நிமிடம் ஒன்றுக்கு 30 சொற்கள் என்ற சுருக்கெழுத்து வேகப் பரீட்சையொன்றில் சித்தியடைதல் வேண்டும். இந்தப் பரீட்சையில் அவ்வாறு சித்தியடையத் தவறும் பட்சத்தில் சந்தர்ப்பத்துக்கேற்றவாறு நியமனம் முடிவுறுத்தப்படுவதற்கு அல்லது முன்பிருந்த சேவைக்குத் திருப்பியனுப்பப்படுவதற்கு உள்ளாக்கப்படலாம்.

1.5.2. **ஹன்சாட் அறிக்கையாளர் (ஆங்கிலம்)**

(அ) சுருக்கெழுத்து வேகம் - நிமிடம் ஒன்றுக்கு 120 சொற்கள் (90% செவ்வையுடன்)
தட்டெழுத்து வேகம் - நிமிடம் ஒன்றுக்கு 40 சொற்கள் (95% செவ்வையுடன்)

(ஆ) ஆங்கில மொழியில் உயர் தேர்ச்சி

(இ) சிங்கள, தமிழ் மொழி அறிவு, கணனிப் பிரயோக அறிவு, பரந்த பொது அறிவு என்பன மேலதிகத் தகைமைகளாகக் கருதப்படும்.

**(ஈ) பதவியில் நிரந்தரமாக்குவது பற்றிய நிபந்தனைகள்**

தேர்ந்தெடுக்கப்பட்ட ஆங்கில மொழி ஹன்சாட் அறிக்கையாளர்கள் நியமனம் பெற்று ஒரு வருடத்தினுள், 90% செவ்வையுடன் நிமிடம் ஒன்றுக்கு 140 சொற்கள் என்ற சுருக்கெழுத்து வேகப் பரீட்சையொன்றிலும், 95% செவ்வையுடன் நிமிடம் ஒன்றுக்கு 40 சொற்கள் என்ற தட்டெழுத்து வேகப் பரீட்சையொன்றிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இந்தப் பரீட்சைகளில் அவ்வாறு சித்தியடையத் தவறும் பட்சத்தில் சந்தர்ப்பத்துக்கேற்றவாறு நியமனம் முடிவுறுத்தப்படுவதற்கு அல்லது முன்பிருந்த சேவைக்குத் திருப்பியனுப்பப்படுவதற்கு உள்ளாக்கப்படலாம்.

**1.6. ஆட்சேர்ப்பு நடைமுறை**

விண்ணப்பதாரிகள் சுருக்கெழுத்து வேகப் பரீட்சை, மொழி அறிவு, பதிப்பு பற்றிய பரீட்சைகள் மற்றும் நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம் ஆட்சேர்த்துக் கொள்ளப்படுவர்.

***(சுருக்கெழுத்து வேகப் பரீட்சையில் விண்ணப்பதாரர்களுக்கு உரிய வேகம் என்பதால் கருதப்படுவது ஒரு பந்தியை சுருக்கெழுத்தில் எழுதி, பின்னர் தரப்படும் காலத்திற்குள் அதனை 90% செவ்வையுடன் பரிவர்த்தனை செய்வதாகும்).***

**2. குழு அறிக்கையாளர் (சிங்களம்)**
**குழு அறிக்கையாளர் (தமிழ்)**
**குழு அறிக்கையாளர் (ஆங்கிலம்)**

**2.1.சம்பள அளவுத்திட்டம்**

2016.11.07 ஆம் திகதிய 06/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையில் உள்ள அட்டவணை I இற்கு இணங்க இந்தப் பதவிக்கு உரித்துடைய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூ. 43,565-9x755/6x930-55,940/- ஆகும். (சகல மேலதிக கொடுப்பனவுகள் அடங்கலாக இந்த சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த ஆரம்ப முழுமொத்த மாதாந்த சம்பளம் ரூ. 94,000.00 ஆகும்).

**2.2 தொழில் பற்றிய விபரம்**

பாராளுமன்றக் குழுக்களின் கூட்டக் குறிப்புகளை சுருக்கெழுத்தில் எழுதி சரியாகவும் பூரணமாகவும் அறிக்கைகளைத் தயாரித்தல்.

**2.3 வயதெல்லை**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தின்போது 18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும் (ஏற்கனவே அரசாங்க/ மாகாண அரசாங்க / பாராளுமன்ற சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது).

**2.4. கல்வித் தகைமைகள்**

கல்விப் பொதுத் தராதர உயர்தர (உ/த) பரீட்சையில் (பழைய பாடத் திட்டம்) ஒரே தடவையில் 04 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் / கல்விப் பொதுத் தராதர உயர்தர (உ/த) பரீட்சையில் (புதிய பாடத் திட்டம்) ஒரே தடவையில் 03 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல், கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சா/த) பரீட்சையில் உரிய **மொழியில்** திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல் மற்றும் கணிதப் பாடம் அடங்கலாக 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

கல்விப் பொதுத் தராதர சாதாரண பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் மொழி உட்பட 05 பாடங்களில் திறமைச் சித்தியடைந்திருத்தலுடன் கணிதபாடத்தில் சாதாரண சித்தி உட்பட 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். என்பதுடன் உரிய மொழியில் திறமைச் சித்தியுடன் மொத்தமாக ஐந்து திறமைச் சித்திகளைப் பெற்றிருத்தல்

அல்லது

(**உரிய மொழி** - தமிழ் குழு அறிக்கையாளர் (தமிழ்) பதவிக்கு தமிழ் மொழியும் / ஆங்கில குழு அறிக்கையாளர் பதவிக்கு (ஆங்கிலம்) ஆங்கில மொழியும் இருத்தல் வேண்டும்.

**2.5. தொழில்சார் தகைமைகள்**

அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்திலிருந்து சுருக்கெழுத்து மற்றும் தட்டெழுத்து/ சொற்கள் அமைப்பு (word processing) பற்றிய ஒரு சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும். (அரசாங்க/மாகாண/அரை-அரசாங்க சேவை நிறுவனங்களில் சுருக்கெழுத்தாளர் பதவியில் 10 வருடங்களுக்கு குறையாத அனுபவமுடைய விண்ணப்பதாரர்களுக்கு இந்த சான்றிதழ் இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை).

**2.5.1 குழு அறிக்கையாளர் (சிங்களம்)**

(அ) சுருக்கெழுத்து வேகம் - நிமிடம் ஒன்றுக்கு 100 சொற்கள் (90% செவ்வையுடன்)
தட்டெழுத்து வேகம் - நிமிடம் ஒன்றுக்கு 30 சொற்கள் (95% செவ்வையுடன்)

(ஆ) சிங்கள மொழியில் உயர்தர தேர்ச்சி

(இ) ஆங்கில, தமிழ் மொழி அறிவு, கணனிப் பிரயோக அறிவு மற்றும் பரந்த பொது அறிவு என்பன மேலதிகத் தகைமைகளாகக் கருதப்படும்.

**(ஈ) பதவியில் நிரந்தரமாக்குவது பற்றிய நிபந்தனைகள்**

தேர்ந்தெடுக்கப்பட்ட சிங்கள மொழி ஹன்சாட் அறிக்கையாளர்கள் நியமனம் பெற்று ஒரு வருடத்தினுள், 95% செவ்வையுடன் நிமிடம் ஒன்றுக்கு 30 சொற்கள் என்ற சுருக்கெழுத்து வேகப் பரீட்சையொன்றில் சித்தியடைதல் வேண்டும். இந்தப் பரீட்சையில் அவ்வாறு சித்தியடையத் தவறும் பட்சத்தில் சமயோசித அடிப்படையில் நியமனம் முடிவுறுத்தப்படுவதற்கு அல்லது முன்பிருந்த சேவைக்குத் திருப்பியனுப்பப்படுவதற்கு உள்ளாக்கப்படலாம்.

**2.5.2 குழு அறிக்கையாளர் (தமிழ்)**

(அ) சுருக்கெழுத்து வேகம் - நிமிடம் ஒன்றுக்கு 100 சொற்கள் (90% செவ்வையுடன்)
தட்டெழுத்து வேகம் - நிமிடம் ஒன்றுக்கு 30 சொற்கள் (95% செவ்வையுடன்)

(ஆ) தமிழ் மொழியில் உயர்தர தேர்ச்சி

(இ) ஆங்கில, சிங்கள மொழி அறிவு, கணனிப் பிரயோக அறிவு மற்றும் பரந்த பொது அறிவு என்பன மேலதிகத் தகைமைகளாகக் கருதப்படும்.

**(ஈ) பதவியில் நிரந்தரமாக்குவது பற்றிய நிபந்தனைகள்**

தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ் மொழி ஹன்சாட் அறிக்கையாளர்கள் நியமனம் பெற்று ஒரு வருடத்தினுள், 95% செவ்வையுடன் நிமிடம் ஒன்றுக்கு 30 சொற்கள் என்ற சுருக்கெழுத்து வேகப் பரீட்சையொன்றில் சித்தியடைதல் வேண்டும். இந்தப் பரீட்சையில் அவ்வாறு சித்தியடையத் தவறும் பட்சத்தில் சமயோசித அடிப்படையில் நியமனம் முடிவுறுத்தப்படுவதற்கு அல்லது முன்பிருந்த சேவைக்குத் திருப்பியனுப்பப்படுவதற்கு உள்ளாக்கப்படலாம்.

**2.5.3. குழு அறிக்கையாளர் (ஆங்கிலம்)**

(அ) சுருக்கெழுத்து வேகம் - நிமிடம் ஒன்றுக்கு 100 சொற்கள் (90% செவ்வையுடன்)
தட்டெழுத்து வேகம் - நிமிடம் ஒன்றுக்கு 40 சொற்கள் (95% செவ்வையுடன்)

(ஆ) ஆங்கில மொழியில் உயர் தேர்ச்சி

(இ) சிங்கள, தமிழ் மொழி அறிவும் கணனிப் பிரயோக அறிவும் மற்றும் பரந்த பொது அறிவும் மேலதிகத் தகைமைகளாகக் கருதப்படும்.

**(ஈ) பதவியில் நிரந்தரமாக்குவது பற்றிய நிபந்தனைகள்**

தேர்ந்தெடுக்கப்பட்ட ஆங்கில மொழி ஹன்சாட் அறிக்கையாளர்கள் நியமனம் பெற்று ஒரு வருடத்தினுள், 90% செவ்வையுடன் நிமிடம் ஒன்றுக்கு 120 சொற்கள் என்ற சுருக்கெழுத்து வேகம் பற்றிய பரீட்சையொன்றிலும், 95% செவ்வையுடன் நிமிடம் ஒன்றுக்கு 40 சொற்கள் என்ற தட்டெழுத்து வேகம் பற்றிய பரீட்சையொன்றிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இந்தப் பரீட்சைகளில் அவ்வாறு சித்தியடையத் தவறும் பட்சத்தில் சமயோசித அடிப்படையில் நியமனம் முடிவுறுத்தப்படுவதற்கு அல்லது முன்பிருந்த சேவைக்குத் திருப்பியனுப்பப்படுவதற்கு உள்ளாக்கப்படலாம்.

**2.6 ஆட்சேர்ப்பு நடைமுறை**

விண்ணப்பதாரிகளி சுருக்கெழுத்து வேகப் பரீட்சை, மொழி அறிவு, பதிப்பு பற்றிய பரீட்சைகள், மற்றும் நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம் ஆட்சேர்த்துக் கொள்ளப் படும்.

***(சுருக்கெழுத்து வேகப் பரீட்சையில் விண்ணப்பதாரர்களுக்கு உரிய வேகம் என்பதால் கருதப்படுவது ஒரு பந்தியை சுருக்கெழுத்தில் எழுதி, பின்னர் தரப்படும் காலத்திற்குள் அதனை 90% செவ்வையுடன் பரிவர்த்தனை செய்வதாகும்).***

**3. பாராளுமன்ற உரைபெயர்ப்பாளர் (சிங்களம்/ஆங்கிலம்/சிங்களம்)**
**பாராளுமன்ற உரைபெயர்ப்பாளர் (சிங்களம்/தமிழ்/சிங்களம்)**
**பாராளுமன்ற உரைபெயர்ப்பாளர் (ஆங்கிலம்/தமிழ்/ஆங்கிலம்)**

**3.1 சம்பள அளவுத்திட்டம்**

2016.11.07 ஆம் திகதிய 06/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் அட்டவணை I இற்கு இணங்க இந்தப் பதவிக்கான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூ. 47,340 -3x 755/13x 1,030 - 62,995 /- ஆகும். (சகல மேலதிக கொடுப்பனவுகள் அடங்கலாக இந்த சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த ஆரம்ப முழுமொத்த மாதாந்த சம்பளம் ரூ. 100,000.00 ஆகும்).

**3.2 வயதெல்லை**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 22 வயதுக்கு குறையாமலும் மற்றும் 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் (தற்பொழுது அரசாங்க சேவையில் / மாகாண அரசாங்க சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களுக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.)

**3.3 கல்வித் தகைமைகளும் அனுபவமும்**

கீழ்காணும் (அ), (ஆ) ஆகியவற்றின் கீழ் எந்தவொரு விதத்திலாயினும் கல்வித் தகைமைகளை பூர்த்தி செய்துள்ளவரும், அனுபவத்தை உடையவருமான விண்ணப்பதாரர்கள் மேற்குறித்த பதவிற்கு விண்ணப்பிக்கலாம்.

(அ) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பங்கலைக்கழகத்திலிருந்து அல்லது பட்டத்தை வழங்கும் நிறுவனமான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்திலிருந்து ஒரு பட்டத்தைப் பெற்றிருத்தல் வேண்டும். **பாராளுமன்ற உரைபெயர்ப்பாளர் (சிங்களம்/ ஆங்கிலம்/சிங்களம்) பதவிற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள், சிங்கள அல்லது ஆங்கில மொழியையும், பாராளுமன்ற உரைபெயர்ப்பாளர் (சிங்களம்/தமிழ்/சிங்களம்) பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள், சிங்கள அல்லது தமிழ் மொழியையும், பாராளுமன்ற உரைபெயர்ப்பாளர் (ஆங்கிலம்/தமிழ்/ஆங்கிலம்) பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள், ஆங்கில அல்லது தமிழ் மொழிகளில் தமது பட்டங்களைப் பெற்றிருத்தல் வேண்டும்.**

மற்றும்

க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில், இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில், கணித பாடத்தில் திறமைச் சித்தியும் மற்றும் பட்டம் பெறாத மொழியில் திறமைச் சித்தியும் அடங்கலாக 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மற்றும்

மேற்குறித்த தகைமைகளை கொண்டுள்ள ஒரு விண்ணப்பதாரர் ஒரு அரச நிறுவனத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தில் கற்பித்தல், உரைபெயர்ப்பு, மொழிபெயர்ப்பு மற்றும் வெகுஜன ஊடகம் போன்ற மொழியை அடிப்படையாகக் கொண்ட துறைகளில் இரண்டு வருடங்களுக்கு குறையாமல் அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

மற்றும்

மொழிகளுக்கு இடையில் தடையின்றி உரைபெயர்க்கக்கூடிய ஆற்றலுடையவராய் இருத்தல் வேண்டும்.

(ஆ) க.பொ.த. (உயர் தரம்) பரீட்சையில் (பழைய பாடத்திட்டம்) ஒரே தடவையில் 04 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் அல்லது புதிய பாடத்திட்டத்தில் ஒரே தடவையில் 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மற்றும்

க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில், இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில், கணித பாடத்தில் திறமைச் சித்தியும் மற்றும் பட்டம் பெறாத மொழியில் திறமைச் சித்தியும் அடங்கலாக 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**பாராளுமன்ற உரைபெயர்ப்பாளர் (சிங்களம்/ ஆங்கிலம்/சிங்களம்) பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள், சிங்கள மொழியிலும் மற்றும் ஆங்கில மொழியிலும், பாராளுமன்ற உரைபெயர்ப்பாளர் (சிங்களம்/தமிழ்/சிங்களம்) பதவிற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள், சிங்கள மொழியிலும் மற்றும் தமிழ் மொழியிலும், பாராளுமன்ற உரைபெயர்ப்பாளர் (ஆங்கிலம்/தமிழ்/ஆங்கிலம்) பதவிற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள், ஆங்கில மொழியிலும் மற்றும் தமிழ் மொழியிலும் திறமைச் சித்திகளை பெற்றிருத்தல் வேண்டும்.**

மற்றும்

மேற்குறித்த தகைமைகளைக் கொண்டுள்ள ஒரு விண்ணப்பதாரர் ஒரு அரசாங்க நிறுவனத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தில் கற்பித்தல், உரைபெயர்ப்பு, மொழிபெயர்ப்பு மற்றும் வெகுஜன ஊடகம் போன்ற மொழியை அடிப்படையாகக் கொண்டவொரு துறையில் ஐந்து வருடங்களுக்கு குறையாமல் அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

மற்றும்

மொழிகளுக்கு இடையில் தடையின்றி உரைபெயர்க்கக்கூடிய ஆற்றல் இருத்தல்.

## 3.4 ஆட்சேர்ப்பு நடைமுறை

விண்ணப்பகாரர்கள் சமகால உரைபெயர்ப்பு மற்றும் மொழிபெயர்ப்பு தொடர்பான பரீட்சைகள் மற்றும் நேர்முகப் பரீட்சை மூலம் ஆட்சேர்த்துக் கொள்ளப்படுவர்.

**குறிப்பு:** மேற்குறித்த 3.3 (அ) அல்லது (ஆ) இன் கீழ் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரர்கள் தாம் விண்ணப்பிக்கும் பிரிவுக்குரிய ஊடக மொழிகளுக்கு இடையில் சமகாலத்தில் உரைபெயர்க்கக் கூடிய ஆற்றலைக் கொண்டிருத்தல் வேண்டும். ஆயினும், சமகால உரைபெயர்ப்பு அனுபவத்தை பெற்றிருக்க வேண்டும் என்ற அவசியமில்லை.

## 4. சேவை நியதிகளும், நிபந்தனைகளும்

(அ) இப்பதவி நிரந்தரமானதும், இப் பதவிக்கான ஓய்வூதிய முறைமையானது எதிரில் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் கொள்கையளவிலான தீர்மானத்திற்கு நீங்கள் உட்பட வேண்டும். தெரிவு செய்யப் படுகின்ற விண்ணப்பதாரர்கள் ஆரம்பத்தில் மூன்று

(03) வருட தகுதிகாண்கால அடிப்படையில் சேவைக்கு உட்படுத்தப்படுவதுடன், அரசாங்க சேவை அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர ஓய்வூதிய உரித்துடைய பதவியொன்றில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள ஆளொருவர் தெரிவு செய்யப்படுமிடத்து அவர் ஒரு வருட கால பதில் கடமையாற்றும் அடிப்படையில் நியமிக்கப்படுவார்.

(ஆ) தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரர்கள் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதிக்கு ஏற்புடையதான நிதி மற்றும் திணைக்கள ஒழுங்கு விதிகளுக்கு இயைந்தொழுகுதல் வேண்டும்.

(இ) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள், அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்படுகின்ற விகிதாசாரத்திற்கு அமைய விதவைகள் / விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு தமது சம்பளத்திலிருந்து பங்களிப்புத் தொகையைச் செலுத்துதல் வேண்டும். இவர்கள் மருத்துவ பரிசோதனையொன்றுக்கும் உட்படுத்தப்படுவார்கள்.

(ஈ) தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரர்கள் நியமிக்கப்படுவதற்கு முன்னர் அவர்கள் தொடர்பான பாதுகாப்பு பற்றிய சான்றறிக்கையொன்றும் பெற்றுக் கொள்ளப்படும்.

**5.** விண்ணப்பதாரர்கள் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளை (மூலப் பிரதிகள் அல்ல) தமது விண்ணப்பங்களுடன் இணைத்தனுப்புதல் வேண்டுமென்பதுடன், மூலப் பிரதிகளைக் கோரும் பட்சத்தில் அவற்றைச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(அ) பிறப்புச் சான்றிதழ்
(ஆ) கல்வித் தகைமைச் சான்றிதழ்கள்
(இ) தொழில்சார் தகைமைச் சான்றிதழ்கள்
(ஈ) தொழில் சார் அனுபவ சான்றிதழ்கள்

**6.** அரசாங்க / மாகாண அரசாங்க சேவைகளில் / அரச கூட்டுத்தாபனங்களில் / நியதிச்சட்டசபைகளிலுள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்கள / நிறுவனத் தலைவர்களின் ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

**7.** பதவியைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்துடன் ஏதேனுமொரு வகையில் செல்வாக்கைப் பிரயோகித்தலானது தகுதியின்மைக்கு வழிவகுக்கும்.

**8.** விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு விடயம் தவறானதென்பது ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு முன்னர் கண்டறியப்படுமிடத்து, அவர் தகுதியற்றவரென குறிப்பிடப்படுவதற்கும், நியமிக்கப்பட்ட பின்னர் அவ்வாறு கண்டறியப்படுமிடத்து பதவி நீக்கம் செய்யப்படுவர் .

**09.** விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்னர் கிடைக்கப் பெறுகின்ற அல்லது மேலே குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்களின்றி அனுப்பப் படும் அல்லது திணைக்கள / நிறுவனத் தலைவர்களினூடாக அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் திணைக்கள / நிறுவனத் தலைவர்களின் ஊடாக கிடைக்கப் பெறுகின்ற விண்ணப்பங்களும், பதவிக்கான மாதிரிப் படிவத்திற்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

இலங்கைப் பாராளுமன்றம்
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே.

2023.06.14